அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006.

தொடக்கக் கல்வி பட்டயத் தேர்வு, மே/ஜூன் – 2026

விடைத்தாட்களின் நகலினை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்தல் & மறுகூட்டல் (Retotalling) / மறுமதிப்பீட்டிற்கு (Revaluation) விண்ணப்பித்தல்

செய்திக் குறிப்பு

மே/ஜூன் 2026, தொடக்கக் கல்வி பட்டயத் தேர்வெழுதி விடைத்தாட்கள் ஒளிநகல் கோரி விண்ணப்பித்த தேர்வர்கள் விடைத்தாட்களின் ஒளிநகல்களை 24.09.2026 பிற்பகல் முதல் www.dge.tn.gov.in **என்ற இணையதளத்திற்கு சென்று Notification என்பதை Click செய்தால் திரையில் தோன்றும் DEEE என்ற வாசகத்தினை Click செய்து பின்னர் DEE Exam MAY / JUNE – 2026 Scan PDF downloading வழியாக பதிவிறக்கம்** (Download) செய்து கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

விடைத்தாட்களின் நகலினை பதிவிறக்கம் செய்த பிறகு மறுகூட்டல் (Retotalling) / மறுமதிப்பீட்டிற்கு (Revaluation) விண்ணப்பிக்க விரும்பினால் இணையதள முகவரியில் **Revaluation / Retotal application form DEEE என்ற தலைப்பினை Click செய்து வெற்று விண்ணப்பப் படிவத்தினை பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்த விண்ணப்பத்துடன் அதில் குறிப்பிட்டுள்ள கட்டணத் தொகையை** கீழ்க்குறிப்பிட்டுள்ள நாட்களில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் நேரடியாக செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறது.

விண்ணப்பிக்க வேண்டிய நாட்கள்: 25.09.2026 பிற்பகல் முதல் 30.09.2026 வரை

வ. எண்	விண்ணப்பிப்பவர்கள் வகை	கட்டணம்	கட்டணம் செலுத்தும் இடம்
1	விடைத்தாளின் மறுகூட்டலுக்கு விண்ணப்பிப்பவர்கள்	ஒரு பாடத்திற்கு ரூ.205/–	தேர்வர் வசிக்கும் மாவட்டத்திற்கு அருகில் அமைந்திருக்கும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் உரிய கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும்.
2	விடைத்தாளின் மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிப்பவர்கள்	ஒரு பாடத்திற்கு ரூ.505/–	

ஒம்/–
இயக்குநர்

நாள்:24.09.2026